DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | நிவேதா (Lw - 6) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(2**ம் எதிரி ஆஜர்**, 1, 3, 4, 5**ம் எதிரிகள் ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது**)**

முதல் விசாரணை **Date : 04.09.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சிங்கலாந்தபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அஜர் எதிரியை தெரியும் இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியும். இந்த வழக்கின் எதிரிகளுக்கும் அ.சா.1 லட்சுமிக்கும் இடையே அடிதடி பிரச்சனை ஏற்பட்டது என்று கேள்விபட்டேன். 28.06.2021ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் போலிசார் பிரச்சனை நடந்த இடத்தில் வந்து விசாரணை செய்தார்கள் போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பபம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது அ.சா.1 லட்சுமிக்கும் எதிரிகளுக்கும் இடையே நில பத்திரம் தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது என்றும் அதன் காரணமாக இந்த

வழக்கின் எதிரிகள் சட்டமுறனாக ஒன்று கூடியும் லட்சுமியை ஆபாச வார்த்தைகளால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தி தலைமுடியயை பிடித்து இழுத்து சங்கடத்தை ஏற்படுத்தினர், குச்சி மற்றும் கத்தியால் தாக்கி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கையொப்பம் செய்ததாளில் என்ன விபரம் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**